Unilever

258, எம் வின்செண்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# தொடர்ந்து 11ஆவது ஆண்டாக இலங்கையின் முதல் தர தொழில் வழங்குனராக யுனிலீவர் தெரிவு

**கொழும்பு 2023, மார்ச் 22:** யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் தொடர்ச்சியாக 11ஆவது ஆண்டாக, இலங்கையிலுள்ள இளங்கலைப் பட்டதாரிகளிடையே முதல் தர தொழில் வழங்குனராக (Employer of Choice) அங்கீகாரம் பெற்றுள்ளது. இலங்கை இளைஞர்களை நாளைய எதிர்காலத்திற்கு ஏற்ற தலைவர்களாக உருவாக்குவதற்கான நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இந்த பெருமதிப்புமிக்க விருது காண்பிக்கின்றது.

Employer of Choice ஆய்வானது, நாட்டிலுள்ள தேசிய மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களிலுள்ள முகாமைத்துவம், விஞ்ஞானம், பொறியியல் துறைகளில் உள்ள இளங்கலைப் பட்டதாரிகளிடையே நடத்தப்படும் வருடாந்த கணக்கெடுப்பாகும். இளைஞர்கள் மனதில் நிறுவனங்களின் இருப்பு, நிறுவனங்களில் வழங்கப்படும் தொழில் வாய்ப்புகள், இளைஞர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்தும் வகையில் நிறுவனங்கள் மேற்கொள்ளும் முதலீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில், இதில் பங்கேற்பவர்கள் நிறுவனங்களை தரவரிசைப்படுத்துவர். அந்த வகையில் இதில் யுனிலீவர் ஸ்ரீலங்கா தொடர்ச்சியாக முதலிடத்தில் உள்ள தொழில் வழங்குனராக அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சாதனை குறித்து, **யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் மனிதவளப் பணிப்பாளர் அனன்யா சபர்வால்** தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட போது, *“இலங்கையில் இளங்கலைப் பட்டதாரிகளால் முதல் தர தொழில் வழங்குனராக மீண்டும் ஒருமுறை தெரிவு செய்யப்பட்டு, அங்கீகாரமளிக்கப்பட்டமை தொடர்பில் நாம் பெருமையடைகின்றோம். 2030ஆம் ஆண்டுக்குள் உலக சனத்தொகையில் 30% ஆனவர்கள் புதிய தலைமுறையினராக இருப்பார்கள் என, முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் எதிர்கால தொழிலாளர் சக்தியாக உருவாகும் ஒரு வளர்ந்து வரும் சக்தியாகவும் அவர்கள் இருப்பார்கள். அவர்களின் எதிர்கால உடற்தகுதியை மேம்படுத்தும் அதே வேளையில், புதிய தலைமுறையினரின் நெகிழ்வுத்தன்மை மற்றும் உள்ளடக்கிய நிலை போன்ற தனித்துவமான அம்சங்களைப் பூர்த்தி செய்யும் வகையில், எமது இளைஞர்களுக்கான சலுகைகளை நாம் தொடர்ச்சியாக மேம்படுத்துவோம். இலங்கை முழுவதிலும் உள்ள இளைஞர்களை வலுவூட்டுவதற்காக எம்முடன் கைகோர்த்துள்ள பல்கலைக்கழகங்கள், இளைஞர் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் உள்ளிட்ட எமது வெளியார்ந்த பங்காளிகளுடன், இந்த பெருமதிப்பிற்குரிய அங்கீகாரத்தை நாம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.”* என்றார்.

இந்த அங்கீகாரம் குறித்து **யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹாஜர் அலபிபி** கருத்துத் தெரிவிக்கையில், *"இந்த மைல்கல்லானது இலங்கை இளைஞர்களுடனான ஒரு தசாப்தத்திற்கும் மேலான எமது அர்த்தமுள்ள தொடர்புகளை காட்டுகின்றது. எமது இளைஞர்களே எமது எதிர்காலமாகும். ஒரு பொறுப்புள்ள பெருநிறுவனம் எனும் வகையில், அவர்களின் வேலைவாய்ப்பு திறன்களை வளர்ப்பதற்கு மட்டுமல்லாமல், அவர்களை உலகின் எதிர்காலத் தலைவர்களாக உருவாக்குவதற்கும் புத்தாக்கமான வழிகளில் அவர்களுடன் கூட்டு சேர்வதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். எமது இளைஞர்களுக்கு தொடர்ந்து ஆதரவளித்து, அதன் மூலம் அவர்களின் திறன்களை மேம்படுத்தி, தாக்கம் செலுத்தக் கூடிய கற்றல் அனுபவங்களை உருவாக்கி, ஒரு சிறந்த எதிர்காலத்தை அவர்களுக்காக கட்டியெழுப்பும் நோக்குடன், எதிர்கால வேலைகளுக்காக அவர்களைத் தயார்படுத்துவோம்."* என்றார்.

2025 ஆம் ஆண்டளவில் 100,000 இளைஞர்களை சிறந்த வேலைவாய்ப்பு திறன்களுடன் உருவாக்குவதற்கான தனது உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம், அதன் SPARKS மாணவத் தூதுவர்களுடன் இணைந்து, 'Future of Work' (வேலையின் எதிர்காலம்) என்ற தலைப்பில், தனது வருடாந்த இளைஞர் மன்றத்தை, தொடர்ச்சியாக ஒன்பதாவது வருடமாக அண்மையில் நடத்தியிருந்தது. இதில் பங்கேற்ற 50 இற்கும் அதிக பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 400 இளங்கலைபட்டதாரிகள் மற்றும் பட்டதாரிகளுக்கு, பணியின் எதிர்காலம் என்ன என்பது பற்றிய முழுமையான கண்ணோட்டம் விளக்கப்பட்டது. அத்துடன், யுனிலீவர் நிறுவனம் களனிப் பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் திணைக்களத்துடன் அதன் சந்தைப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பட்டப்படிப்புகளுக்கான 'மூலோபாய பங்காளி' எனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அண்மையில் கைச்சாத்திட்டிருந்தது. அத்துடன் இலங்கை இளைஞர்களின் ஆற்றல்மிக்க திறனை வளர்ப்பதற்கு உதவும் வகையில், CIMA, இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (SLIIT) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (KDU), AIESEC Sri Lanka, Gavel clubs ஆகியவற்றுடனும் நிறுவனம் கைகோர்த்துள்ளது.

***~ (முற்றும்) ~***